
13-8-70

# ஆத்ம ஜோதி



ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 22 | சாதாரண ஸ்ரீ ஆடி மீ 1ம் உ [17-7-70] | சுடர் 9

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சும்மா இரு | 259 |
| அழகு | 260 |
| உலகத்தின் குறை | 261 |
| அப்பர் அருளமுதம்—9 | 264 |
| எண்ணம் ''நாலும் மூன்றும்'' | 267 |
| இயற்கையே சோதிடம் | 269 |
| மனிதப்பிறவியே புனிதப்பிறவி | 272 |
| வேத சாத்திரங்களைக் கற்று விடுதலைபெற முடியுமா? | 275 |
| ஸ்ரீ விநாயகர் வழிபாடு | 280 |
| ''செய்தி'' | 286 |
| கயிறு ஊஞ்சல் | 289 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்



ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# சும்மா இரு

எம்மா லறிவதற வெம்பெருமான் யாதுமின்றிச்
சும்மா விருக்கவொரு சூத்திரந்தா னில்லேயோ.

—தாயுமானவர்.

என்னிறைவனே! என் தற்போதத்தாலே தெரிவது ஒழியுமாறும்,ஓர் கன்மசங்கல்பமுமின்றிச் சும்மாயிருந்து வருதற்கானவோர் சூழ்ச்சிதானும் எனக்கின்றே; சிவபோதம் ஒழிந்து சும்மா இருத்தற்கு யாதாமோர் தந்திரோபாயங் கூட எனக்கில்லேயோ!

மனம் வாயுவின் அம்சமானது. வாயு எந்த நேரமும் சலித்துக்கொண்டிருப்பதுபோலவே மனமும் கணந்தோறும் அலேந்துகொண்டே இருக்கிறது. எண்பதுகோடி நினேந்தெண்ணுவது மனம் என்பது ஔவையார் வாக்கு. ஒரு மூச்சு உள்ளே இழுக்கும்போது எத்தனேயோ எண்ணங்கள்தோன்றி அம்மூச்சை வெளியேவிடும்போது எத்தனேயோ எண்ணங்கள் அழிந்துவிடுகின்றன.

காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட்டு ஓடும் தொழிலேவிட்டு மனத்தை ஒன்றிலே ஊன்றியிருக்கப் பழகவேண்டும். ஒன்றையே நினேந்து நினேந்து அதிலே பழகிப் பழகி நினேப்பறநிற்கும் நிலேயே சும்மா இருக்கும் நிலேயாம். அதுவே பேரின்ப நிலேயுமாகும்.

★★

# அழகு

உண்மையின் புன்முறுவலே அழகு. ஆனால் உண்மையாகிய பெண், தன் முகத்தை உற்று நோக்கும் கண்ணாடி சரியானதாக இருக்கவேண்டும்.

—கவிதாகூர்.

அழகு அலட்சியத்தையும் செல்வம் செருக்கையும் வளர்க்கிறது.

—ஓர் அறிஞர்.

அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ அதைப் போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது.

—அண்ணா

அழகின் அருமையை உணராமல் அதிலே குற்றம் கண்டுபிடிக்கமுயல்வது அறிவீனம். இது ஒரு பெரும் பிழை.

—ஆஸ்கார் ஒயில்ட்

ஒரு பொருளுக்கு அழகு உண்டாயின் அவ்வளவுக்கு அதனுள்ளே அமைந்திருக்கிறது. பிறர்போற்றுவதனால் அது உண்டாவதல்ல. பிறர் கண்டு வியப்பதால் அதன் அழகு அதிகமாவதுமில்லை; குறைவதுமில்லை.

—மார்க்க அரேலியர்.

எல்லையற்ற நிலையிலிருந்து எல்லைக்குட்பட்ட நிலைக்கு ஒழுகுவதே உண்மை. அல்லது நன்மை. எல்லையில்லாத நிலைக்குச் செல்லும் அதன்எதிரொலியே அழகும் இன்பமும்.

—கவிதாகூர்.

இயற்கை அழகை உணர்ந்து அநுபவிக்கத் தெரியவேண்டும். குற்றம்போலும் குறைபோலும் தோன்றுவதிலும் உண்மை அழகு இருக்கிறது.

—மார்க்க அரேலியர்

# உலகத்தின் குறை

: ஆசிரியர் :

உலகத்தைத் திருத்த எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள். தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். தோன்றப் போகிறார்கள். மனிதன் நாகரீகம் அடைந்த காலந் தொட்டு மகான்கள் இடையீடின்றித் தோன்றிக்கொண்டே இருக்கின்றார்கள். அருள் உபதேசம் புரிந்துகொண்டே இருக்கின்றார்கள். மனிதன் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் முயன்றாலும் கற்று முடிக்க முடியாத அளவிற்கு அருளுபதேசங்கள் மலிந்துள்ளன.

மனிதன் தான் முன்னேற வேண்டுமென்று கருதினால் இத்தனை உபதேசங்களும் கற்கத் தேவையில்லை. ஒரு உபதேசத்தை மாத்திரம் பெற்றுச் சாதனை செய்யத் தொடங்கி விட்டால் அவன் சிலநாட்களில் தேவநிலைக்கு உயர்ந்து விடுவான்.

மழை பொழிகிறது. நிலத்தைப் பண்படுத்தி வைத்திருப்பவன் பயன் அடைகிறான். அதுபோல இறைவன் திருவருள் எப்பொழுதும் பொழிந்துகொண்டே இருக்கிறது. அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் உள்ளவர்கள் இறைவன் திருவருளைத் தமக்கு ஆக்கிக் கொள்ளுகின்றார்கள்.

அரசியல் வாதிகள், அருளாளர்கள், ஆசிரியர்கள், பேச்சாளர்கள், பொதுவுடமை வாதிகள், முதலாளிகள், தொழிலாளிகள் அனைவருமே உலகம் குறைவுடையதாகச் சொல்கிறார்கள். தம்மால்தான் உலகின் குறையைப் போக்கமுடியும் எனக்கூறுகிறார்கள். எத்தனையோ ஆண்டுகட்கு முன்பிருந்த குறைகள் இன்று வரை இருந்து கொண்டே இருக்கின்றன. இத்தனைபேர் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தும்

குறை, குறையாகவேதான் உள்ளது. குறைகள் நாகரிகம் முதிர கூடிச்செல்கின்றனவே தவிர குறைந்ததாகத் தெரிய வில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

குறையைப் போக்குவதாகக் கூறுபவர்களுக்குத் தமது குறை தெரியவில்லை. குருடன் குருடனுக்கு எவ்வாறு வழி காட்ட முடியும்? குறை கூறுபவர்கள் எல்லாம் தம்குறை யைத் தாம் அறியாதவர்களே. குறைவுடையவனுக்கு உலகம் முழுவதும் குறையாகவே தெரியும்.

மனித உள்ளங்களில் ஆசைத்தீ அவியவில்லை. கொழு ந்துவிட்டு எரிகின்றது. இதனால் உலகம் முழுவதுமே பற் ருக்குறை ஏற்பட்டுள்ளது. அடிப்படையான தர்மமே ஆட் டங்கண்டுள்ளது. தியாக உணர்வு செத்துமடிந்துவிட்டது. கூலியை எதிர்பார்த்தே மனிதன் உதவிபுரிய வேண்டுமென நினைக்கின்றான். மேகமும், ஊதுபத்தியும் தாம் அழிந்து மனித சமூகத்திற்குச் செய்யும் தியாகத்தை மனிதன் தன் கண்ணாரக் கண்டும் தியாக உணர்வை வளர்த்துக் கொள்ளு கின்றான் இல்லை.

தான் ஒருவன் மேலே வருவதற்கு எத்தனை தலைகளை யும் மண்ணில் உருட்டுவதற்கு மனிதன் ஆயத்தமாக இருக் கின்றான். பாடுபட்டுக் கற்ற கல்வி மனிதனுக்குரிய அகம் பாவத்தைப் போக்குவதற்குப் பதிலாக அகம்பாவத்தை வளர்த்துக்கொண்டு வருகிறது. மனிதனைத் தேவ நிலைக்கு உயர்த்துவதற்குப் பதிலாக மிருகநிலைக்குத் தள்ளிக்கொண் டே இருக்கிறது. வாழ்நாள் முழுவதும் வருந்திக் கற்றகல்வி அவனுக்கே பயன்படவில்லையானால் அக்கல்வியாலாகும் பயன் தான் என்ன?

"கல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள்"

என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா? ஆகவே மனிதன் இறக்கும் வரை குறை இருக்கத்தான் செய்யும். மனிதன் ஒவ்வொருவனும் தன்குறையை உணர்ந்து தன்குறையைத்

திருத்தி வாழ்வார்களானல் உலகின் குறை ஓரளவு நீங்கும். இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதனும் வழிகாட்டியாக நிற்கிருனே தவிர வழிகாட்டும் இடத்தைச் சென்றடைபவர்களாக முயற்சிக்கவில்லே. மெய்யைப் பொய்யாக்கவும் பொய்யை மெய்யாக்கவும் வல்ல பேச்சுவன்மை மிகுந்தவர்கள் மத்தியிலே மெய்யை மெய்யென்றும் பொய்யைப் பொய்யென்றும் சொல்லும் தைரியம்பிறக்கவில்லே. காரணம் சுயநலமே.

உலகின் குறை நீங்குவதற்கு ஒரே ஒருவழி. ஒவ்வொரு மனிதனும் தத்தம் குறைகளே உணர்ந்து அதனே நீக்கித்தாம் மனிதர்களாக வாழுதலே. அங்ஙனம் வாழும் ஒருவனேச் சுற்றிப் பத்து உண்மையான மனிதர்களாவது வாழ்வார்கள்.

**தான் திருந்த உலகம் திருந்தும்.**

---

சொர்க்கத்தை விரும்பியோ, நரகத்தை அஞ்சியோ செய்யும் அறம் அறத்துக்காகவே செய்யப்பட வேண்டும். சொர்க்கமும் நரகமும் நம்மகத்திலேயே உள.

எது சரியாகத் தோன்றுகிறதோ அதைப் பயமின்றிக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். பொய்யும் சூதும் இருந்து கொண்டுதானிருக்கும். நாம் சரியான காரியத்தைச் செய்தால் அந்த இரண்டும் குறையுமேயன்றிக் கூடா.

அபாயத்தை முன்கூட்டி அறிந்து கொள்வதும் அது வரும் சமயம் ஆண்டவன் அருளே நம்பி அசையாதிருப்பதுமே உண்மையான அறிவுடைமையாகும்.

-காந்தி

# அப்பர் அருளமுதம்-9

–: ( முத்து ) :–

## அஞ்சேல் உன்னை அழைக்க வந்தேன்!

அப்பரும் சம்பந்தரும் திருமறைக்காடு சென்றனர். எம்பெருமான் திருக்கோயில் திருக்கதவம் திறக்கப்படாமல் இருப்பதறிந்து சம்பந்தப்பெருமான் கதவுதிறக்கப்பாடுமாறு அப்பரிடம் வேண்டினார். அப்பரும் ''பண்ணினேர் மொழியாள்'' எனத் தொடங்கிப் பாடிவரும்போது கதவு திறக்கப்பெறவில்லை. திருக்கடைக்காப்புச் செய்யுளிலே ''எண்ணீர் இரக்கமிலீர்'' என்று பாடியவுடன் திருக்கதவங்கள் திறந்தன. அடியார் எல்லாரும் வணங்கியபின் அப்பர் சம்பந்தரைக் கதவு அடைக்கப் பாடவேண்டும் என்றார். சம்பந்தர் மகிழ்வுடன் பாடியருளினார். முதற் பாட்டிலேயே கதவுகள் மூடிக்கொண்டன.

அன்றிரவு அப்பர், தாம்பாட அரிதிலே திறந்ததையும் பிள்ளையார் பாட எளிதிலே அடைத்ததையும் எண்ணித் திங்கள் முடியார் திருவுள்ளம் அறியேன் என்று திகைத்தார். அவருள்ளம் இந்த நினைவினாலே குழம்பியது. உறக்கம் என்பதே வரவில்லை. அம்மடத்தின் ஒரு பக்கத்திலே அருநித்திரை செய்து கொண்டிருந்தார். கனவிலே கண்ணுதலார் வெண்ணீறு படிந்த மெய்யராய்த் தோன்றி வாய்மூரிலிருப்போம்; தொடர்ந்து வா என்றார். விழித்தெழுந்து 'எங்கே என்னை' என்று தொடங்கி 'வாவென்று போனாரதன்கொல்' எனப்பாடி இது எம்பெருமான் அருளாகிற் செல்வேன் என்று முடிவு செய்து மறைக்காட்டைவிட்டுப் புறப்பட்டார். கனவில் தோன்றிய உருவத்துடன் கண்ணுதலார் வழிகாட்டி முன் சென்றார். அப்பர் பின் தொடர்ந்து சென்றார். செல்

லச் செல்ல அவர் சேய்மையிலே காணப்பட்டாரேயொழிய நெருங்க முடியவில்லை. கைக்கெட்டிய உணவு வாய்க்கெட்டாததைப் போலச் செல்வதைக் கண்டு திகைத்தார்! வழி காட்டியவள்ளல் அங்கிருந்த ஒரு கோயிலிலே மறைந்தார்! பின் சென்ற வாகீசர் கவலையுற்ருர்! நாவுக்கரசு திருவாய் மூர் செல்கிருர் என அறிந்த அந்த ஆளுடைய பிள்ளையாரும் பின்பற்றி அங்கே வந்தார்.

எனக்குப் பற்றுக்கோடாக ஒருவரைத் தேடினேன். அவரைக் கண்டேன். கண்ணுக்கெட்டியவர் கைக்கெட்டாமல் சென்றுவிட்டாரே. அவரைப் பார்த்த உடனேயே எனக்குத் தஞ்சம் அளிக்கக்கூடிய ஒரே ஒருவர் அவர்தான் என்பதை உணர்ந்தேன். அவரது தோற்றம் என்னைக் காந்தம் என இழுத்தது. தண்ணீர் தேடிப் பாலைவனத்தில் அலைந்து திரிந்தவனுக்கு தடாகத்தைக் கண்ணுற்ருல் எந்த நிலையேற்படுமோ அதுபோன்ற ஒரு நிலை அடைந்தேன் அவரைக் கண்ணுற்றபோது.

எனக்குத் தஞ்சம் தருவாரைக் கண்டேன். கொஞ்சம் பொறுத்திருந்து பாரக்கும் பொறுமை இழந்தேன். அவசரப்பட்டு நீயார் என்றேன். எனது பேச்சில் பதட்டம் நிரம்பியிருந்தது. பயப்படாதே உன்னைத் திருவாய் மூருக்கு அழைத்துச் செல்ல வந்தேன் என்று விடை கூறினுர். இதனுல் நான் உய்ந்தேன் என்று நினைந்து எழுந்து ஓட்டமாக ஓடினேன். அவரோ என்னைப்போல எத்தனையோ பேருக்கு ஓட்டம் காட்டிய பேர்வழி அல்லவா? எனது ஓட்டம் அதிகரிக்க அதிகரிக்க இடைவெளித் தூரம் கூடிக்கொண்டே சென்றது. திருவாய்மூர்த் திருக்கோயிலைச் சேர்ந்தவுடன் மறைந்துவிட்டார் அவர். மாயத் திருவிளையாடலில் வல்லவராயிருக்கிருர். எண்ணற்ற அவரது மாயங்களை எம்மால் உணர்ந்து கொள்ள முடியவில்லை என்று பேசுகின்ருர் அப்பர் சுவாமிகள்.

"தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சேல் உன்னை அழைக்கவந் தேன்என்ருர்

உஞ்சேன் என்றுகந்தே எழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூர் அடிகளே.''

நாவுக்கரசு கவலையுடன் திருவருளையறியாமலே திருக்க தவு திறக்கப்பாடிய எளியேனுக்கு மறைக்கலாம்! ஒரு பாட்டிலேயே அமைக்கப்பாடிய பிள்ளையாருக்கும் தங்கள் கோலத்தை மறைக்கலாமோ? என்று கூறினர். அப்போது பிள்ளையாருக்குமட்டும் பெருமானுர் திருக்கோலம் வெளிப்பட்டது. பிள்ளையார் கண்டு பணிந்து அப்பருக்குங் காட்டினுர். அப்பரும் கண்டு வணங்கிப் ''பாடவடியார் பரவக்கண்டேன்'' என்று தொடங்கிப் பாடிப் பரவினுர்.

---

உலகம் நாடி நிற்பதெல்லாம் சாஸ்திரங்களுக்காக அன்று இதய சுத்தியுடன் செய்யும் பணிக்காகவேயாகும். ஆதலால் உலகத்துக்கு நன்மை செய்யக்கூடியவர்கள் தம்முடைய காலத்தை சாஸ்திரம் வகுப்பதில் விரயம் செய்துவிடமாட்டார்கள்.

யாரைக் கடவுள் அம்சம் பொருந்தியவர்என்று கருதுகிறேமோ அவருடைய சொல்லையும் செயலையும் நம்முடைய ஆன்மாவில் நிறைந்து நிற்கச் செய்துகொண்டு நம்முடைய இதயம் ஒப்புகின்ற அளவுக்கு அவற்றின்படியே நடக்க முயல வேண்டும். எந்த சாஸ்திரம் இதற்கு அதிகமாக நமக்கு வழி காட்டி நன்மை செய்துவிட முடியும்?

-காந்தி

# எண்ணம்
## "நாலும் மூன்றும்"

(சி. கணபதிப்பிள்ளை)

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், மனம், மொழி, மெய் என்னும் மூன்றிலும் உய்த்து உணர்ந்து, உலகத்திற்கு உதவுதல் வேண்டும். வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈய வல்லது சிந்தனை. இது மனத்திஞல் நிகழ்வது. இக்கருத்தினை அப்பரடிகள்,

"சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு, புந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி அந்திப்பிறையணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே"

என்று கல்லும் கரைந்து கனியாகும் பாவனையில் அருளிச் செய்கின்றார்.

செய்கின்ற செயல்களிலே யமைந்த இத்திருப்பாடலின் மூலம் விளக்கியருளிய பொருள் செந்தேன். அதுவும் பண்புபெற்ற முறையோடு சிறந்து பொழியப்படுகின்றனவாம்; யாருக்கு? சிந்திப்பவர்க்கு சிறந்து பொழியப்படுவன, அதுவும் முந்திப் பொழிவன, இவை மட்டுமா? முத்தியும் கொடுப்பன, இவையெல்லாம் அப்பரடிகளாரின் சிந்தனையின் பெருந்தன்மைகள்; உண்மையான அரிய அனுபவங்கள்; அழியாத பேரின்பக் கனிச்சுரங்கங்கள்.

"கள்ளூறுந் தெள்ளு தமிழ்க் கவிவூறுங்கருணை நிறை காட்சியன்பு உள்ளூறுங்குண நலன்களுடனூறும் பேரின்பத்துணர்வின் ஞானத் தள்ளூறும் அருட்பரமரடியூறும் அறம் பொருளும் இன்பம் வீடென் றுள்ளூறும் வாகீசர் உளத்தூறும் திருவடி யெம் உயர்ந்த வீடே"

வீட்டு நெறியாகிய பெரும்பேற்றினையும் கொடுத்தருளுகின்றது திருவையாற்றில் அமர்ந்திருக்கின்ற எம்பெருமானுடைய "திருவடித்தலமே" என்று உரைத்தருளுகின்ற திரு

நாவரசரின் திருவார்த்தைகளின் சிறப்புக்கள் சிந்திக்கும் பேறுபெற்ற அடியவர்களுக்குத் தெவிட்டாத கருத்தோவியங்கள், ஓவியமும் காவியமும் ஒன்றிப்பிணைந்து உடலுயிர் போன்று களிநடம் புரிகின்ற காட்சி நலமிக்க கருவூலங்கள் அப்பரடிகளாரின் அருட்பாடல்கள்; மருணீக்கி மலர் போன்ற அழகோடு மணத்தோடு என்றும் நினைக்கும் அன்பர்களின் அகத்தூறி அருளூறும் தெய்வத் தமிழ்ப் பாடல்கள் திருநாவுக்கரசரின் திருப்பாடல்; இத்தகைய திருமுறைகளைத் தினம் ஓதும் பேறுபெற்ற நாம் பாக்கியசாலிகள், மனம், மொழி, மெய் என்னும் மூன்றினையும் இறைவனுக்கே அர்ப்பணம்செய்து வாழ்கின்ற உத்தமர்களே என்றும் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்கின்றவர்களாவார்கள். அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களையும், மனம், மொழி, மெய்யென்னும் மூன்றினாலும் செய்து இறைவன் திருவருளைப்பெற்று உய்வோமாக.

★★

# அன்பே தெய்வம்

உண்மையே தெய்வம். அன்பே தெய்வம். உண்மையையே பேசு. ஒவ்வொருவரையும் நேசி. நீ சீக்கிரமே தெய்வ தரிசனம் பெறுவாய். சாதுக்கள், சன்னியாசிகள், பக்தர்கள், இவர்களுடன் சத் சங்கம் கொள். இது ஒன்றே உனக்கு விவேகம், வைராக்கியம், ஆத்மீக பலம், மனச் சாந்தி இவைகளை எல்லாம் அளிக்க வல்லது. இதைத் தவிர வேறு வழியில்லை. சாதுக்களைத் தேடியலே. அவர்கள் எங்குமுளர். உண்மை உள்ளமும் ஆவலும் தேவை. அவர்கள் எப்போதும் உன்னை அன்புடன் வரவேற்கத் தயாராயிருக்கின்றார்கள்.

—சிவானந்தர்

# இயற்கையே சோதிடம்

ச. இ. அப்புத்துரை - சோதிடன்
வெள்ளவத்தை.

பாடம் - 6 ஆதாரம் ஆறு

**

மூலாதாரம் - குதம், சுவாதிஷ்டானம் - குய்யம், மணி பூரகம் - நாபி (தொப்புள்) அனுகதம் - இதயம், விசுத்தி- அடிநாசி, ஆக்ஞை - நெற்றி.

இவற்றுள் சோதிடப் பகுதிக்கு முக்கியமாகத் தென் படுவது, மணிபூரகம் தொப்புள். நாம் பிறக்குமுன் அந்தர லோகமாகிய மாதாவின் வயிறே ஆதாரமாக இருந்தோம். நாம் ஜெனனமானதும், தாய்க்கும் சேய்க்கும் தொடர் பாகிய தொப்புள் கொடியை வெட்டியதும், உடனே அக் கொடியில் ஓர் முடிபோட்டுச் சேயைப் பூமாதேவியில் படுக்கவிடுவார்கள். தாயின் ஆதாரம் முடிவுற்றதும் பூமி யின் ஆதாரம் ஆரம்பமாகிறது. நாம் பிறக்கும் போது பூமாதேவியானவள் மாதாவாகவும் வாலிபத்தில் மங்கை யாகவும் வயோதிபத்தில் மகளாகவும் இளமையுற்று வரு வதினுல் இப்பூமாதேவியானவள் தேவரில் ஒருவர் என்பது புலனுகிறது.

கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்று விழி
எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு - நண்ணும்
அனந்தந் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்கு
அனந்தம் விழியென் றறி.

நேயர்கள் 6ம் பாடம் ஆறுபோல் நீளுதே என்று அலுப்புறுமல் ஆதாரத்தாயை அறிவோம் வாருங்கள்.

நாம் விசுவம், ஜகத், என்ற சொற்களைக் கையாளு கின்றோம். இந்த ஜகத் (உலகம்) விசுவத்தின் (சிருஷ்டியின்) ஒரு சிறு பகுதியே. இச் சிறு துணுக்கைக்கூட நம்மால்

புரிந்துகொள்ள இயலவில்லை. சிருஷ்டியனைத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தோமானல் இவ்வளவு விசாலமாகத் தெரியும் இவ்வுலகம் மிகவும் சிறியதென்பது தெரியவரும். இரவு நேரத்தில் நாம் வானத்தைச் சிறிது நோக்குவோமாயின் அதில் எண்ணற்ற கோளங்கள் காணப்படும். வான வெளியில் அமைக்கப்பட்டுள்ள அக்கோள வரிசையில், அந்தச் சின்னஞ் சிறு அழகிய பூக்கள் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிப் பார்க்கும் லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் ஆகிய இவை அனைத்தின் ரூபங்களின் தன்மை உங்களுக்குத் தெரியுமா? இச் சின்னஞ்சிறு நட்சத்திரங்கள் மிகமிகப்பெரியவை. அவைகளினுள் அளவற்ற சூரியன்களும் அடங்கிப் போம். அவை ரசமயமான ஒளிமயமான தகதகவெனக் கொதிக்குந் தாதுக்களின் கோளங்கள். இத்தகைய இவ்வெண்ணிலடங்கா உருளைகளை யார் கணக்கிட முடியும். இவைகளுக்கு அளவுமில்லை எண்ணிக்கையுமில்லை. வெறும் ஊனக் கண்ணுக்கே ஆயிரமாயிரம் இருப்பதாகத் தெரிகிறது. தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு பார்க்கையில் இவை கோடிக்கணக்கில் தென்படுகின்றன. அப்பொழுது இது எங்கே முடிகிறது. இது எப்படி அமைந்துள்ளது. என்பதைப் புரிந்துகொள்வதே கஷ்டமாகிவிடும். மேலும் கீழும் எல்லாவிடங்களிலும் பரவியுள்ள இவ்வனந்த சிருஷ்டியின் ஒரு சிறு துணுக்கே உலகமெனப்படுவது. ஆனல் இவ்வுலகமே எவ்வளவு பெரிதாகத் தோன்றுகிறது!

இவ்விசால சிருஷ்டி பரம்பொருளின் சொரூபத்தின் ஓர் அம்சமே, இனி அதன் மற்றோர் அம்சத்தையும் பார்ப்போம். அதுதான் (காலம்) நாம் கழிந்த காலத்தைக் கவனிப்போமானல் சரித்திர எல்லைக்குள் அதிகமானல் பதினயிரம் வருஷம் வரை போகக்கூடும். அதற்கு முந்திய காலம் புரிவதேயில்லை. சரித்திரகாலம் என்பது (10000) பத்தாயிரமாயிருக்க நம் ஆயுட்காலமோ நூறு வருஷங்கூட இல்லை. உண்மையில் காலம் ஆதியும் அந்தமும் அற்றது. இதற்குள் கழிந்த காலம் எவ்வளவு என்பதற்கு ஓர் அளவோ கணக்கோ இல்லை. இனி எவ்வளவு காலம் இருக்

கின்றது என்பதை நாம் கணக்கிட முடியவில்லை. நமது உலகம் சிருஷ்டியுடன் ஒப்பிடுகையில் மிகவும் இழிந்ததாய், சிறிதா யிருப்பதைப்போல, சரித்திரங் கண்ட இந்தப் பத்தாயிரம் வருஷமும் அனந்த காலத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றுமேயில்லாதது போன்றுளது. கடந்த காலம் அனுதியாயிருக்க வருங்காலமோ இறுதியற்றதா யிருக்கின்றது. இச்சிறிய நிகழ்காலமோ நாம் பேசிக்கொண்டிருக்கையிலேயே கழிந்தகாலத்திற் போய்க் கலந்துவிடுகிறது. நிகழ் காலம் உண்மையில் எங்கேயிருக்கிறது என்பதைச் சொல்லி முடிப்பதற்குள் அது இறந்த காலமாகிவிடுகிறது. இத்தகைய இந்தச் சிறிதும் நிலையற்ற நிகழ்காலம் மட்டுமே, நம்முடையது. இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்றேன். இப்பேச்சு என்வாயில் இருந்து வெளிவந்ததும் அது நான் பேசியதாக இறந்த காலத்தைச் சேர்ந்து விடுகிறது. இவ்வாறு இப்பெரிய காலவெள்ளம் ஒரேவகையாய் ஓடிக்கொண்டே யிருக்கிறது. அதன் உற்பத்தித்தானமும் தெரிய வில்லை. அது போய்க்கலக்கும் கடலும் தெரியவில்லை. இடையிலுள்ள சிறுபகுதியையே நாம் பார்க்கின்றோம். இவ்வாறு பூமியின் பிரமிக்கச்செய்யும் பரப்பு ஒரு புறமும் காலத்தின் பலமிக்க பிரவாகம் ஒருபுறமுமாயுள்ள சிருஷ்டியின் இவ்விருபகுதிகளின் மூலமாய் சிருஷ்டியை நோக்குவோமானுல் நாம் நம் கற்பனைத்திறனை எவ்வளவுதான் தூண்டிவிட்ட போதிலும் இவைகளின் எல்லையை நம்மால் காணவே இயலவில்லை. இறந்தகாலம் நிகழ் காலம் எதிர் காலம் ஆகிய மூன்று காலங்களிலும் மேலே கீழே இங்கே ஆகிய எல்லாவிடங்களிலும் வியாபித்துள்ள விராட் பரம்பொருளை ஒருமிக்க இவ்வுருவில் காணவேண்டுமென்று வேண்ட ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா இவ்வுருவில் அர்ச்சுனனுக்குக் காட்சி கொடுத்தார்.

★

அன்னதானம், அறிவுதானம் முதலியவைகளை ஒருவன் பலன் கருதாது செய்துவருவது நல்லது. அதனுல் அவன் ஈஸ்வரன்பால் அழைத்துச் செல்லப்படுகிறுன்.

ஸ்ரீ இராமக்கிருஸ்ணர்.

# மனிதப்பிறவியே புனிதப்பிறவி

மாத்தளை - அருணேசர்.

நம் ஆன்மாவானது கடவுளின் ஓர் அமிசமே. படைப்பின்போது கடவுளாகிய பரமாத்மாவிலிருந்து இந்த சீவாத்மா பிரிகிறது. பிரிந்து பூலோகத்தில் வந்து பிறந்து, பல பிறவிகளில் முன் செய்துள்ள கர்மங்களான நல்வினை தீவினைகளுக்குத் தகுந்தவாறு பற்பல இன்பங்களையும் துன்பங்களையும் அநுபவித்து, பிரமஞானம் பெற்ற பின் அப்பர–மாத்மாவுடன் போய் கலந்து விடுகிறது. இதனைத் தான் முக்தி, மோட்சம், சொர்க்கம், வீடு எனப் பலவாருகக் கூறப்படுகிறது.

இதனை, இறைவனிடம் நம்பிக்கை வைத்து அவனை அடைந்து சதாகாலமும் அழிவற்ற ஆனந்தம் அநுபவிப்பது எனவும் கொள்வர். இந்நிலையை அடைதற்கு ஏதாவது ஒரு சாதனம் அத்தியாவசியமாகின்றது. இச்சாதனம் பல வகையாக உள்ளன.

அவற்றில் முதலாவது கடவுள் வழிபாடு அல்லது பக்தி. இந்த பக்தி முறையால் தான் தீவினைப் பயனை நீக்கிக் கொள்ள முடியும். அதற்கு மனித உடல் எடுத்தால் தான் சாத்தியப் படும். மற்ற விலங்கின உடல்கள் பக்தி செலுத்தமுடியாத குறைந்த அறிவு கொண்டன, ஆகவே தான் மனிதப் பிறவியை மண்ணுலகில் மேன்மைப்பட மதிக்கத் தக்க புனிதப் பிறவியாகக் கருதப் படுகிறது.

''மூவரேயாயினும் தேவரேயாயினும், மற்று யாவரேயாயினும்'' மக்கள் யாக்கையில் வந்தால் தான் '' கடவுள் காட்சி'' பெறமுடியும். இது நமது மதச் சித்தாந்தம்.

''மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே'' என அப்பர் பெருமானும், ''மக்கள் யாக்கையில் வருதலே

மாண்புடைத்து'' எனத் திருமூலரும் ''அரிதரிது'' மானிட ராதலரிது'' என ஒளவையாரும், எண்ணரிய பிறவிதனில் மாநுடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்'' எனத் தாயுமானுரும் அருளியது இதனுலேயே.

மாநுடப் பிறவிக்கு மற்ற பிறவிகட்கில்லாத ''பகுத் தறிவு என்ற தனித் தன்மை இருப்பதால் தான், அப்பிற வியால் கடவுள் காட்சியைக் காணக்கூடிய இயல்பு உண்டா கிறது. நன்மை தீமை, சுகம் துக்கம், முதலியவைகளால் பகுத்தறியும் பண்பே பகுத்தறிவாகும்.

ஆன்மாக்கள் தாம் தாம் முன் செய்த (காமியம் வினை யாகிற) புண்ணிய பாபங்களுக்கீடாகப் பிறக்கும் போது பல தரப்பட்ட பிறவிகளையும், அப்பிறவிகளுக் கேற்ற ஊர், பேர், உறவு, உடல், வினை, கருத்து, சீர், சொர்க்கம், நரகம், தெய்வம், சமயம், ஆகிய இவைகளை அடைக்கின் றன. அவ்வான்மாக்கள் இவற்றின் தோற்றக் கோடுகளை ஞானசிற்சக்தியால் உணர்ந்த பின்னரே கடவுளின் பேரரு ளுக்கு அருகதையாகின்றன.

மறு பிறப்பு இல்லை என்ற மேல்நாட்டவருங்கூட இப் பொழுது மறுபிறப்பு உண்டு என்பதை தங்கள் ஆராய்ச்சி யால் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இவ்வாண்டிலே வருந்தி உழைத்துப் பயிரிட்டு அரும் பாடுபட்டுக் காப் பாற்றுகின்றவனே அப்பயிரின் பலனை அடுத்த ஆண்டில் உண்டு உடுத்து இன்புறுகின்றுன் என்பதை அநுபவத்தில் அனைவரும் அறிந்திருக்கிறோம். இதைப்போலவே மனிதர் இப்பிறவியில் செய்யும் நன்மை தீமைகளை அவர்களுக்கு அடுத்த பிறவியில் இன்பமும் துன்பமுமாய் வந்தடையும்.

எறும்புகள் முதல் எல்லா உயிர்களும் அநாதிபந்தமா கிய வினைப்பயன் நீங்கி வீடுபேறு எய்துதற்குரிய பரிபா கம் வரும்வரையில் அவைகளை, எல்லாம் வல்ல இறைவன் சிருஷ்டியாதிகளில் விடுத்து நடத்துகின்றுர். அவை அங்ஙு

னம் நடைபெறும் போதுதான் தத்தம் வினைக்கீடான உடல்களை மாறிமாறி எடுத்து உழன்று வருகின்றன.

அவையே நால்வகைத் தோற்றமும், எழுவகைப் பிறப்பும், 84 இலட்சம் யோனிபேதங்களையும் உடையனவாய்க் காணப்படுவன.

நால்வகைத் தோற்றம் என்பது - அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. அண்டசம் = முட்டையினின்று தோன்றுவன; சுவேதசம் = வேர்வையினின்று தோன்றுவன; இவை கிருமி, கீடம், பேன், மற்றும் சில ஊர்வனவும், விட்டில் பூச்சி முதலியனவுமாம். உற்பிச்சம் = விதை, வேர், கிழங்கு முதலியனவைகளைப் பிளந்து மேல் தோன்றுவன; சராயுசம் = கர்ப்பத்தில் தோன்றுவன.

தேவர், மனிதர், நாற்கால் விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் இவை எழுவகைப்பிறப்பு. இந்த எல்லாப் பிறப்புகளும் இறைவனுடைய ஆணையால் கன்ம வசத்திற்கேற்றபடி கிடைக்கிறது.

இவ்வகையான 84 இலட்சம் யோனிகளில் பிறந்திளைத்த பின்னர்தான் மனிதன் தன் தற்போதைய மானிடப் பிறவியை அடைந்திருக்கிறான்.

> ''புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்''

என்னும் திருவாசகத்தொடரில் இவ்வுண்மை விளக்கப்பட்டுள்ளது காண்க.

மனிதக் கருப்பையைக் கூர்ந்து கவனித்து ஆராய்ந்து பார்த்தால் கடந்த காலப் பிறவிகளின் குறிக்கோடுகளைக் காணலாம் என்பர் பெரியோர்.

மேற் கண்ட பிறவிகளிலெல்லாம் அடையமுடியாத சிறந்த பேற்றை அடைவதற்கு இம்மானுட உடலை இறைவன் நமக்குத் தந்திருக்கிறான். (தொடரும்)

# வேத சாத்திரங்களைக் கற்று விடுதலை பெற முடியுமா?

- சுவாமி சிவானந்தா -
சிவானந்த நகர் — இமயம்.
(தமிழாக்கம்:— ம. சி. சிதம்பரப்பிள்ளை)

(சென்ற இதழ் தொடர்ச்சி

அருமை நண்பனே! சொல்லுகின்றேன்! கவனமாகக் கேட்கவும். தன்னை உணர்தல் அல்லது மோட்சம் பெறுவதேஒருவனுடைய இலட்சியம். நம்பிக்கையேஇதனைப்பெற்றுத் தரும். சிலர் பல விதமான சாதனைகள் மூலம் இந்த நம்பிக்கையைப் பெறுகின்றனர். வேத சாஸ்திரம் ஓதுதல், ஸ்தோத்திரம் ஓதுதல், (இப்போது நான் செய்து கொண்டிருப்பது) தருமம் செய்தல், விரதம் இருத்தல், அர்ப்பணம் செய்தல் போன்ற சாதனைகளே இவைகள்.

பதவி பெறுவதில் எல்லோருக்கும் ஒரேவகையில் ஒரே நேரத்தில் கிடைக்கக் கூடியதன்று. கஷ்டப் பட்டுப் படித்து மற்றவர்களுடைய உதவிகளையும் பெற்றும் ஈற்றில் இறைவனுடைய கடாட்சத்தினலேயே ஒரு பதவியைப் பெறுகின்றீர். இதே போன்று தான் விடா முயற்சியாலும் இடையருத சாதனையினலும் சித்த சுத்தி அதாவது மனச்சுத்தி, ஆண்டவனின் அளப்பில்லாத கருணையினல் பெறுகின்ருன். ஈற்றில் ஆன்ம ஈடேற்றமும் அடைகின்ருன். எவ்வளவுக் கெவ்வளவு சாதனையில் முயற்சி பெறுகின்ருனே அவ்வளவுக் கவ்வளவு இவ்வுலகிலிருந்து விடுதலையும் அடைகின்ருன். சிலர் காலம் தாழ்த்தியே பெறுகின்றனர். சிலருக்கு பல பிறவிகள் எடுத்த பின்னே தான் ஆன்ம விடுதலை கிட்டுகின்றது. ஒருவரும் இதிலிருந்து தடுத்து விடப்பட்டவர்களாகக் கருதப் பட மாட்டார்கள். எப்போதாவது ஒருநாள் எல்லோரும் விடுதலையடைந்தே தீரவேண்டும்.

எல்லோரும் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். இப்போது விளங்குகின்றதா? நண்பனே!

மே;— முறையாக விளக்கம் தந்தபடியினால் ஏற்க வேண்டியதே. இருந்தும் எனக்கு முழு நம்பிக்கை இல்லையே! உங்கள் உரைகளையும் தவறு எனவும் கொள்ள முடியாது.

சு: அப்படியாயின், எனது வல்லமைக்கமைய (எனது வல்லமையும் மிகவும் கீழ் நிலையிலே உள்ளது) இதனை மேலும் விளக்க முயலுவேன். கவனமாக கேட்கவும்.

கப்பல்கள் கல்கத்தாவிலிருந்து லிவப்பூருக்குப் போகின்றன. இக்கப்பல்கள் கட்டாயம் தாம் போக வேண்டிய துறை முகங்களை வந்தடையும் என என்ன நிச்சயம். முரட்டுக் கால நிலை, புயல் திரையலையின் வேகம், இவை காரணமாக கப்பல்கள் மூழ்கவும் கூடும். அதனால் ஈற்றில் கப்பல்களைக் கைவிடவும் நேரிடும். இப்படி நடக்கின்றதே என நினைத்து, கப்பற் பிரயாணஞ் செய்வதை நிறுத்துகின்றார்களா? கப்பல்கள் தினமும் செல்கின்றன. பொதுவாகச் சேர வேண்டிய துறைமுகங்களைச் சென்றடைகின்றன. சில நீரில் மூழ்குகின்றன. சில துறைமுகங்களுக்குப் பிந்தி வந்தடைகின்றன. சில தாம் போக வேண்டிய துறைமுகங்களை விடுத்து வேறு துறைமுகங்களைப் போய் அடைகின்றன. இதே விதமாகவே, தன்னை அறிதல் என்பதனை அடைய முடியவில்லை என்பதனால், சுய புத்தியுள்ளவன் தன் முயற்சியைக்கைவிட வேண்டுமென்பதல்ல. உண்மையான சாதகன் தனது இலக்கைப் பெறும் வரை சாதனையை நிறுத்த மாட்டான். சாதனையில் எவ்வளவு முதிர்ச்சி பெறுகின்றானோ அவ்வளவுக்கு தனது இலக்கை வெகு சீக்கிரம் பெறுகின்றான். சிலர் பல் யோனி வாய்ப் பட்ட பின் பெறுகின்றனர், எவ்விதமான மாற்றங்கள், நிபந்தனைகள் வாழ்வில் வந்தாலும் ஈற்றில் அடையவேண்டிய இடம் ஒன்றே ஒன்று தான். அதனை அடைந்தே தீருவார்கள். ஆகவே தான் புத்தி சாதுரியமுள்ள சாதகன், தனது தொடர்

பருத சாதனையினுல் அடையவேண்டிய குறிக்கோளை அடைகின்ருன்.

மே;- சுவாமி ஜி! நீங்கள் கூறியது முற்றும் விளங்குகின்றது!

சு:- உலகத்தை ஒருவராலும் திருத்த முடியாது. ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் போன்ற மிகவும் உன்னத ஞானிகள் தங்களால் இயன்றவரை உலகத்தைத் திருத்தப் பாடுபட்டவர்கள். கதைகளில் வரும் சுணங்கனின் வால் போன்று உலகம் கோணலாகத்தான் மீண்டும் மீண்டும் தோற்றம் அளிக்கின்றது. நாயினுடைய வாலை நீண்ட குழாய்க்குள் (PIPE) ஆயிரம் வருடம் வைத்துப் பின் எடுத்தாலும் அது முன்போன்று வளைந்த வண்ணமாகவே இருக்கும். ஆகவேதான் உலகத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்குரியதன்று. மக்களுக்கு விடுதலை அளிப்பதும், எங்கள் பொறுப்புமன்று. (இதற்கென அவதாரம் எடுத்த மகாத்மாக்கள், பெரிய ஆன்மாக்கள், விடுதலைக்கான கருமங்களை ஆற்றுவார்கள்.) உலகத்தில் எமக்கேற்படும் அநுபவங்கள் மூலமாக எமது வாழ்க்கையில்௳ம் சோதனையில் சித்தியடைவோமாக! இவ்வுலகம் உயர்௳டயது. ஆண்டவன், குருவுக்குக் குருவானவர். ஆசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியரானவர். உலகக்காட்சிகள் யாவும் எமது பாடங்கள். எவர் இவைகள் மூலமாக நன்மையடைகின்ருரோ, அவர் உண்மையான வல்லமை வாய்ந்தவர். அவர் உண்மையான புத்தி வாய்ந்தவர். செய்ய வேண்டியதைச் செய்தவர் ஆவார். ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். நாம் சாதனை செய்கின்ற ஆரம்ப தினங்களில், மற்றவர்கள் எமது சாதனையைப் பார்த்துவிட்டு ''இவர் மிகு திறமையாகச் சாதனை செய்கின்ருர். மிகவும் மெச்ச வேண்டியதாகும். என்ன துடிதுடிப்பு! எவர்தான் இவ்வாறு செய்வார்கள்''! என்று எல்லோரும் எமக்குக் கூற நாமும் உற்சாகப்படுகின்ழேம். அதனுல் மேலும் மேலும் சாதனையில் ஈடுபடுகின்ழேம். சாதனையில் முன்னேறிக்

கொண்டே போகும் போது, முன் எங்கள் சாதனைகளைக் கண்டு உற்சாகமூட்டிய உரைகளை இப்போது வரவேற்க மறுப்போம். 'Aratir Jana Sam Satih' — அதாவது — மக்கள் கூட்டத்தில் சேருவதில் ஒரு அதிர்ச்சி. கீதா உபதேசத்தின்படி, மக்கள் நடுவில் இல்லாது, தனிமையாகச் சாதனையிலீடுபடுவோம். சாதனையின் பலன் - முத்தி — வந்தடையும் போது, உலகக் காட்சிகள் யாவும் முழுமாற்றமடையும். சகலமும் பிரமம். வேற்றுமை அற்ற நிலை தோன்றும். பிரிகதரநாயக (Bri hadaranayaka) உபநிஷத வாக்கியத்தை அநுபவ ரீதியாகக் காணமுடியும். எப்போதும் எங்கும் பிரமம் ஒன்றையே காணக்கூடிய அநுபவத்தைப் பெறுவோம். இவ்விதம் விடுதலை அடைந்த ஆத்மாவிடம் யாவும் விடுதலை அடையும். 'யான் எப்போதும் ஒரே மனோபாவமாகவே இருப்பேன்! பற்றே! விடுதலையோ! அற்றவனாகவே இருப்பேன்! யான் சிவம்! யான் சிவம்! முற்றும் அறிந்த பரவெளியே!' ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் இந்த உண்மை வார்த்தைகள் அநுபவத்தில் அறிந்தவர்களாவோம்! ஆகவேதான் உலகம் எங்கள் உதவியை ஒருபோதும் நாடவில்லை. நாமே உலகத்தை எமது ஈடேற்றத்திற்காக நாடுகின்றோம்.

ஒரு குழந்தை பிறக்கும் போது சாத்திரி, அக்குழவியின் குறிப்பைக் கணித்துவிட்டு, இக்குழந்தை பிற்காலம் ஒரு கைதேர்ந்த திருடனாகவும், ஏமாற்றுக் காரனாகவும் வருவான் எனக் கூறுகின்றான். 'இக்குழந்தையை வீணாக நாம் ஏன் பராமரிப்பான்! கஷ்டப்பட்டு வளர்த்து, ஈற்றில் மறியலில் இருக்க வேண்டியவனாயிற்றே! ஆகையால் இப்போதே இவனுடைய வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடுவோம்.' என்று ஒரு பெற்றோராவது நினைப்பதில்லை. அக்குழந்தையை எவ்வாறாவது முயற்சி செய்து நல்லவனாக வரச் செய்வார்கள். அவர்கள் வைத்திருக்கும் ஒரு நம்பிக்கை காரணமாகவே, (அதாவது ஏதாவது ஒருநாள் திருந்தக் கூடும்) குழந்தையைப் பேணுகின்றார்கள். இதே போன்றுதான் நாமும் விடுதலை பெறுவோம் என்ற நம்

பிக்கையுடன் அதனை அடைவதற்காக முறையான வழியுடனும் செயல்படுதல் வேண்டும். இறைவனுடைய திருக்கோவில் எப்போதும் திறந்தவண்ணமாகவே இருக்கும். ஒருவருக்கும் எதிராகப் பூட்டப்பட்டிராது. 'உத்தரவின்றி உட்பிரவேசிக்கக் கூடாது' என்ற பலகை அங்கே தொங்குவதில்லை. யாவரும் எப்போதும் வரவேற்கப் படுவார்கள்! பிரயாணிகள் பறவை மார்க்கமாகவோ. எறும்பு மார்க்கமாகவோ அங்கு செல்ல முடியும்! அதாவது அவரவர்களுடைய சாதனையின் பலனைப் பொறுத்தே! இது விளங்குகின்றதா?

மே:- எவ்வளவோ அறிந்துவிட்டேன் சுவாமிஜீ!

சு:— அருமை நண்பா! நீர் அடைந்துள்ள இப்போதய பக்குவ நிலையில் இதற்கு மேல் விளங்கமுடியாது. சாதனையில் ஊன்றிய ஆர்வமும் விடா முயற்சியும் இருந்தால், தன்னை அறியும் உணர்வும் தன் நம்பிக்கையும் வளரும். ஆண்டவன் உம்மை ஆசீர்வதிப்பாராக!

மே:- மிகவும் நன்றி! எனது இந்தப் பிரயாணத்தினுல் அதிக நன்மைகளைப் பெற்றுவிட்டேன்.

சு:— எல்லாம் எமையாளும் இறைவனின் இன்னருளே!

எல்லாப் புகழும் இறைவனுக்கே; உலகத்தில் எமக்குண்டாகும்இடர்கள் உண்மையான இடர்களன்று! திரவியம் எல்லாம் உண்மையான திரவியமன்று!

## உண்மையான இடர் எது!
### எல்லாம் வல்ல ஆண்டவனை மறப்பதே!

ஆண்டவனை நினைவில் வைப்பதும் ஆண்டவனை எவ்விடத்திலும் காண்பதுமேதான் உண்மையான பொக்கிஷம். உமது வாழ்க்கையை ஆண்டவன் சிந்தனையுடன் இணைக்க வேண்டும். அப்படியாயின் உமது செயல்யாவும் புனிதத்தன்மை பெற்றதாகும்! ஆண்டவனுடைய புகழுக்கு எல்லையில்லை.

கருணைக்கடல்!
விருப்பப்படியே!

சாந்தி! சாந்தி! சாந்தி!

# ஸ்ரீ விநாயகர் வழிபாடு

(க. இராமச்சந்திரா, — ஆசிரியர், - சமயமஞ்சரி.)

---

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடுந் தொடர்ந்த வினைகளே"

சின்னஞ் சிறு வயதிலே பெற்றோரிடமிருந்தோ, அல்லது ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களிடமிருந்தோ, கற்றுக் கொண்ட இந்த எளிய, இனிய, சிறிய ஈரடிப் பாக்கள், வயது முதிர்ந்த காலத்தில் நமக்கு எத்தனை வாழ்க்கை அனுபவங்களை நினைவூட்டி புத்திபுகட்டி நிற்கின்றன? பழைய காலக் கல்வி முறை நமக்கு அளித்துள்ள பெரும் பேறு இதுவன்றோ?

விநாயகர் வழிபாடு தமிழ் நாட்டிற்கு எப்போ வந்தது? எவரால் கொண்டுவரப்பட்டது? அவரது உருவமும் விக்[illegible]மும் எந்தக் கோட்பாட்டில் சிருஷ்டிக்கப்பட்டவை? [illegible] ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. விநாயகப் பெருமானின் திருவவதார மகிமைகளையும் திருவிளையாடல்களையும் எடுத்து விளக்கும் புராணங்கள் முதலில் எந்த மொழியில் எவரால் இயற்றப்பட்டதென்ற கேள்வியும் அவசியமற்றதாகும். இந்துக்களாகிய பெருமக்களிடையே, அவர்கள் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, எந்த மொழியைப் பேசுபவர்களாயினுஞ் சரி; விநாயகர் வழிபாடு முக்கிய இடம் பெற்றுள்ள உண்மையொன்றே போதியதாகும். சைவர்கள், வைஷ்ணவர்கள், சாக்தர்கள் முருகன் பக்தர்கள் எவராயினும் சரி, அவர்கள் இரத்தத்தில் விநாயகர் பக்தி ஊறிக்கிடக்கின்றது. அம்மட்டோ! வேதங்களைப் புறக்கணித்த பிறமதத்தினரான சைனரும், பௌத்தரும் கூடத் தங்கள் பள்ளிகளில் விநாயகருக்கு

ஆலயங்கள் அமைத்து அவரை வணங்கி வந்துள்ளார்கள். இலங்கையில் வாழும் சிங்களச் சகோதரர்களில், பழைய முறையில் பௌத்த குருமார்களிடம் ஆரம்பக்கல்வி பயின்றவர்களுள் பலர் இன்றும் சிங்கள மொழியில் பிள்ளையார் தோத்திரங்கள் பாராயணஞ் செய்யும் நூல் "கண தேவி ஹெல்ல" என்று அழைக்கப்படும். அதன் அச்சுப் பிரதிகள் பழைய புத்தகக் கடையில் கிடைக்கும். பூகோள ரீதியாகப் பார்க்கும்போது, விநாயகர் வழிபாடு ஓர் காலத்தில், சீனம், யப்பான், கோரியா உள்பட தென்கிழக்கு ஆசியப் பிரதேசம் முழுவதிலும் வழக்கில் இருந்ததற்குச் சான்றுகள் பல உள்ளன. வெவ்வேறு உருவில் அமைந்த விநாயகர் விக்கிரகங்களை ஆங்குள்ள நூதனப் பொருட் காட்சி நிலையங்களில் காணலாம் ஜாவா, சுமத்திரா முதலாய நாடுகளில் பழைய சைவக் கோயில்களில் பார்க்கலாம்.

விநாயகப் பெருமானை முழுமுதற் கடவுளாகப் பாவித்து அவரையே வழிபடும் சிறு கூட்டத்தினர் உளர். இவர்கள் காணுபத்யர் என அழைக்கப்படுவர். இவர்கள் அப்பெருமானை, மகாகணபதி, ஹரித்ரா கணபதி, உச்சிஷ்ட கணபதி, நவநீத கணபதி, ஸ்வர்ண கணபதி, சந்தான கணபதி என்ற ஆறு திருவடிவங்களில் வழிபடுகிருர்கள். ஏனைய இந்துக்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களான சிவன், சக்தி, முருகன், இராமன், கண்ணன் ஆகிய மூர்த்திகளை வழிபடும்போது அந்த வழிபாட்டைக் கணபதி ஆராதனையுடன் ஆரம்பிப்பர். ஆலயங்களில் நித்திய பூஜைகள் இந்த முறையில் நடைபெறுகின்றன. இதில் வெவ்வேறு திருவடிவங்களும் வித்தியாசமான திருநாமங்களும் வழக்கில் உள.

மதுரையில் சித்திவிநாயகராகவும், முக்குருணி அரிசி பிள்ளையாராகவும், திருச்சி கோட்டையின் முடிவில் உச்சிப் பிள்ளையாராகவும், சிதம்பரத்தில் நர்த்தன கணபதியாகவும், திருவெண்ணெய் நல்லூரில் பொல்லாப் பிள்ளையாராகவும், திருமுதுகுன்றத்தில் ஆழத்துப் பிள்ளையாராக

வும், மேலும் பல தென்னிந்திய சிவஸ்தலங்களில் இது போலவே வெவ்வேறு திருநாமங்களுடன் பெருமான் எழுந்தருளி மக்களுக்கு அருள் வழங்குகிறார். திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளி இருக்கும் விநாயகர், வாதாபி கணபதியென அழைக்கப்படுகிறார். வாதாபி மீது படையெடுத்துச் சென்ற நரசிம்மவர்மனின் சேனாதிபதியான பரஞ்சோதி என்பவரால் கொண்டுவரப்பட்டது இந்த விக்கிரகம். இந்த வரலாற்றைக் கொண்டு சில ஆராய்ச்சியாளர் கணபதி வழிபாடு தமிழ்நாட்டுக்கு வந்தது இதன் பின்தான் என்ற தப்பான முடிவுக்கு வந்ததும் உண்டு ஓர் காலம். இவற்றின் விபரங்களை யெல்லாம் சென்னை அன்பர் எஸ். ராமநாதன் அவர்கள் ''கார்த்திகேயன்'' என்னும் புனைபெயருடன் வரைந்து வாசு பிரசுரமாக வெளிவந்த ''கணநாதன் கதை'' என்னும் அரிய நூலில் காணலாம். விநாயகர் வழிபாட்டில் ஈடுபடுபவர் அனைவரும் கட்டாயமாகப் படிக்கவேண்டிய நூல் இது.

மேற்கூறியவாறு விநாயகப் பெருமானுக்கு பல்வேறு திருநாமங்கள் அமைந்திருந்தபோதிலும், மக்கள் பெரும்பாலும் அவரைக் 'கணபதி', 'விநாயகன்' என்ற இரு திருப்பெயர்களாலேயே போற்றிப் பணிகின்றனர். 'கணபதி' என்னும் திருநாமம் ஞானம் (க) மோட்சம் (ண) என்ற இரண்டிற்கும் பதியானவர் என்னும் கருத்துடைத்து. விநாயகன் என்ற திருநாமம் தனக்கு வேறு ஒரு தலைவனில்லாத தனிப்பரம் பொருள் என்னும் உண்மையை நமக்கு விளக்குகின்றது. (வி—அற்றவர்; நாயகன் தலைவன்) வடமொழியில் விநாயகப் பெருமான் மீது பாடப் பெற்ற தோத்திரங்களுள், ஆதிசங்கரர் அருளிய 'ஸ்ரீ கணேச பஞ்சரத்தினம்' மிகவும் சிறப்புற்றது; அற்புத சக்தி வாய்ந்தது. அதன் முதலாவது சுலோகம் ('முதாகராத்த மோதகம்' என ஆரம்பிப்பது) மேலே குறிப்பிட்ட தத்துவத்தை அழகாக விபரிக்கின்றது. இத்தோத்திரப் பாடலுக்கு அடுத்தபடியாகச் சிறப்புற்ற,

"மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸூத்ர!
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே"

என்னும் சுலோகம் ஸ்ரீ மஹா கணபதி திருமந்திரம் எனப் போற்றப்படுகின்றது. தமிழ் மொழியில் ஔவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல் முக்கிய இடம் பெறுகின்றது. இதில் யந்திர, தந்திர, யோக சாஸ்திரங்களின் நுட்பங்கள் அடங்கியுள்ளன. நாவலர் பெருமான் வகுத்த வழியில் யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்ற பழைய மாணவர்கட்கு, அவர்களது எட்டாம், ஒன்பதாம் வயதில், அதாவது அவர்கள் மூன்றும் நான்காம் வகுப்புகளில் படிக்கும் போது இந்த அகவல் கட்டாய சமயபாடமாகக் கற்பிக்கப்பட்டது. 'விநாயகர் திருவகவல்' என்னும் பிறிதோர் பிரார்த்தனை நூலும் வழக்கிலுண்டு. இதனை அருளியவர் நக்கீர தேவர் என்ற கூற்று நம்பத்தக்கதல்ல. மிகவும் பிற்காலத்தில் இயற்றப்பட்டதென்பதற்கு இந்த அகவலிலேயே அகச் சான்றுகள் பல உள.

மேற்கூறியவாறு ஆயிரக்கணக்கான சமயங்களில் ஆனைமுகக் கடவுள் வழிபாடு நடைமுறையிலிருந்த போதிலும் அவர் வழிபாட்டிற்கு ஆகம சாஸ்திர விதிகளோ விலக்குகளோ கிடையாது. அப்பெருமானை ஓர் மரத்தின் அடியிலோ, குளத்தின் கரையிலோ, நாற்சந்தியிலோ வைத்தும் வணங்கலாம். இந்தவித வழிபாட்டை அவர் பெரிதும் விரும்புவதாகவும் ஓர் கர்ணபரம்பரைக் கதை ஒன்றுண்டு. பார்வதிதேவியாருக்குத் தமது மூத்த குமாரனாகிய பிள்ளையாருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. தனயனோ தனக்குத் தாயைப் போன்ற பெண்ணே தேவை என்று பிடிவாதம் காட்டினார். விண்ணுலகில் தேடிப்பார்த்தும் அவ்வித பெண் கிடைக்கவில்லை. எனவே, தாயின் உத்தரவோடு பூவுலகத்திற்கு வந்து, கிராமப் பெண்கள் பெரிதும் நடமாடும் தெருச்சந்திகள், குளத்தங்கரை முதலிய இடங்களில் வீற்றிருந்து, இன்னும்

தாயைப் போன்ற பெண்ணொருத்தியைத் தேடுகின்ருராம். இது நடக்கக்கூடிய காரியமல்ல; எனவே, அவர் நித்திய பிரமச்சாரியேயாவர். ஹாஸ்யமான இக்கதையில், இயற்கை அழகுக்கும் குணத்திற்கும் உரிய கன்னிமார் விண்ணுலகில் அல்ல மண்ணுலகில் இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தும் கிராமங்களில்தான் இருக்கலாம்என்ற உண்மை பதிந்துள்ளது.

விநாயகருக்கு மிகவும் பிரியமான, விசேடமான, விரதம் சதுர்த்தி விரதம். இருபதாம் நூற்ருண்டில் இந்த விரதத்தின் மகிமையை உலகெங்கும் அறியச் செய்த பெருமை மஹாராட்ஷ்டிர இந்துக்களுக்கும் அவர்களின் இணையற்ற தலைவராய் விளங்கிய ஸ்ரீ பால கங்காதர திலகர் அவர்கட்கும் சேர்ந்ததாகும். ஆடவர்களும், பெண்களும், மாணவ மாணவிகளும் ஒருமித்த மனத்துடன் உபவாசங்காத்து, கோடிக்கணக்கில் மண்ணுல் செய்து ஆராதித்த விநாயக விக்கிரகங்களை உச்சிமேல் சுமந்து, ஆவணி மாச சுக்கில பட்ச சதுர்த்தியன்று அவற்றை நதியில் சேர்ப்பதற்காக ஊர்வலமாக எடுத்துச் சென்ற காட்சியானது அக்கால பிரித்தானிய அரசாங்கத்திற்கு அதிசயத்தையும் பீதியையும் அளித்தது. செல்வர் வறியவர், கற்றவர் கல்லாதவர் என்ற வேற்றுமைகளாலும், சாத்திர கோத்திர சண்டைகளாலும் பிரிந்து நலிந்து கிடந்த மஹாராஷ்டிர சமுதாயம் முழுவதையும் ஒற்றுமைப்படுத்திய லோகமான்ய திலகரின் அற்புத சக்தி நவ இந்தியாவின் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனுல், இச்சம்பவத்தை விநாயக சதுர்த்தி விரதத் தொடர்பில் இந்தியாவில் நடந்த முதலாவது அற்புத நிகழ்ச்சி எனக் கூறமுடியாது. இற்றைக்குச் சில நூற்ருண்டுகட்கு முன் தமிழ் நாட்டிலேயே அதேபோன்ற சம்பவம் பல வருஷங்களாகத் தொடர்ந்து நடந்ததாகக் காணக்கிடக்கிறது. இது நடந்தது, தென்னுட்டில் பாபநாசம், தாலுக்காவில் கணபதி அக்ரஹாரம் என்னும் கிராமத்தில் அங்குள்ள மக்கள் ஆண்டு தோறும் ஆவணிமாச சுக்கில பட்ச சதுர்த்தியன்று விர

தங் காத்து, ஆனைமுகத்தோன் சந்நதியில் தங்கள் சண்டை சச்சரவுகளை எடுத்துரைத்து சமாதானமாகி வீடு திரும்புவார்களாம். அத்தினத்து எவர் வீட்டிலாவது தனி முறையில் பிள்ளையார் பூஜை இராதாம். கிராமம் முழுவதும் குழந்தை குஞ்சுகள் எல்லோருமே ஒருங்கு சேர்ந்து, பிள்ளையார் ஆலயத்திலேயே ஆராதனை செய்வது வழக்கம். இவ்வித விரதங்காக்கு முறையில் இந்நாட்டில் வாழும் நம் இனத்தாரும் சமரசப்பட்டால் எவ்வளவு நன்மையாக இருக்கும்?

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயத் திருப்பணிச் சபை செயலாளர் திரு. செ. கணேஷ் அவர்களின் அன்புக் கட்டளையை மறுக்க முடியாமல், இக்கட்டுரையை ஆரம்பித்த வேளையில் நமது இல்லத்தில் ஓர் எதிர்பாராத அற்புத நிகழ்ச்சி நடந்தது. சிங்கப்பூரிலிருந்து 10-2-70 இலங்கை வந்துள்ள அன்பர், சிங்கப்பூர் 'ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயம் கும்பாபிஷேக மலர்— 9-2-70' என்ற வெளியீட்டின் பிரதி ஒன்றையும், அக்கும்பாபிஷேக விளம்பரப் பத்திரிகையும் தந்தார். இந்த ஆலய வரலாற்றை அந்த மலரில் படித்தபோது, இக்கட்டுரைக்குத் தூண்டு கோலாயிருந்தது அன்பர் கணேஷ் அல்ல. அவர் சேவிக்கும் கணேசப் பெருமானே என்ற உணர்ச்சி எமது உள்ளத்தில் உதித்தது. அப்பெருமானின் திருவருள் முன்னின்று குறித்த திருப்பணி வேலை சீக்கிரம் சிறப்பாக நிறைவேற வேண்டுமென்பது எமது பிரார்த்தனை. சிங்கப்பூர் விநாயகர் ஆலயத்தில் 26-3-70ந் தேதி நடைபெறும் மண்டலாபிஷேகத்தை நிறைவேற்றப் பிரதான ஆசாரியாரான, பிரதிஷ்டா சிரோன்மணி சிவ ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் (நவாலி, இலங்கை) சிங்கப்பூரில் வாசஞ் செய்வதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

வேலவர்க்கு முன்பிறந்த விநாயகனைக் கைதொழுதால்
காலனையும் வென்றுகடைத் தேறலாம் — ஞாலமதில்
பொய் களவு கோபம் பொறாமை புறங்கூறல்
ஐவகையும் நீக்கிவாழ் நீ.

—''நற்சிந்தனை''.

# அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றம்.

தாம்பரம் கிளை, — சென்னை - 59.

## "செய்தி"

சென்னை "அடியார் திருக்கூட்ட இறைபணி மன்ற" தாம்பரம் கிளைச் சங்கத்தினர் 28 – 6 – 1970 ஞாயிற்றுக் கிழமையன்று தங்களது அருணகிரிநாதர் 6வது ஆண்டு விழாவினைத் தாம்பரம் நகரில் உள்ள பேபி உயர் துவக்கப் பள்ளியில் சிறப்புறக் கொண்டாடினார்கள். சாது ஸ்ரீ பித்-துக்குளி முருகதாஸ் அவர்கள் விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினர்.

சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றம் "(தலைமை மன்றம்)-, அடியார் திருக்கூட்ட இறைபணி மன்ற" த்தின் தாம்பரம் கிளை சபையின் மாணவ மாணவியர்கள் "கானபாஸ்கர" "இசைச் சுடர்" ஸ்ரீ ரங்கம் T. R. கண்ணன் (கிளை மன்ற திருப்புகழ் போதகாசிரியர்) அவர்கள்-, புரசை ஸ்ரீ அருணகிரிநாத பக்த ஜன சபையினர்களின் ஆசிரியர் திரு. E. அருணகிரி அவர்களும், சென்னை ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி மாதர் திருப்புகழ் சபையினர் முதலியோரின் திருப்புகழ் இன்னிசை நிகழ்ச்சிகளுடன்-, காஞ்சீபுரம் சங்கீத வித்துவான் திரு. M. N. வேங்கட வரதன் அவர்களால் திவ்யப் பிரபந்தப் பண்ணிசையும் குமாரி உமா சரஸ்வதி குழுவினரின் மாரியம்மன் கரகப் பாடல் இன்-னிசையும் சிறப்புற நடைபெற்றன.

தாம்பரம் அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றக் கிளை சபையின் தலைவர் திரு. T. ஏகாம்பரம் அவர்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அடியார் பெருமக்களையும் மற்றும் சகோதர திருப்புகழ் சபை அங்கத்தினர்கள், தலை-வர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று "அறிமுக உரை" யாற்றினர்.

மன்றக் கிளை சபையின் செயலாளர் திரு. K. கிருஷ்-ணமூர்த்தி அவர்கள் கிளை மன்றத்தின் ஆண்டு அறிக்கையை வாசித்து, வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் பேபி உயர் துவக்கப் பள்ளியில் இலவசமாக நடத்தி வரும் திருப்புகழ் பாடல் பயிற்சி வகுப்பிற்கு எல்லோரும் தங்கள் குழந்தைகளை அனுப்பி திருப்புகழ் தொண்டாற்ற முன் வந்து ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டார்.

''அமிர்த வசனி'' பத்திரிக்கையின் ஆசிரியரும், அடியார் திருக்கூட்ட இறைபணி மன்ற தலைமை மன்றத் தலைவரும் ஆகிய பிரம்மஸ்ரீ முத்துசாமி ஐயர் அவர்கள் தமது ''ஆசியுரை'' யில்:— '' திருமுருகாற்றுப்படை '' யில் கூறப்பட்டுள்ள ஆறு படை வீடுகளினதும் சிறப்பின் புகழையும் ஜீவாத்மா — பரமாத்மா வின் தத்துவத் தொடர்புகளையும் பற்றி விரிவாக எடுத்துக்கூறினார்.

தருமபுரம் ஆதீனம் தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தமது ''ஆசியுரை'' யில்:— திருவா-ரூரில் பிறந்தாரும், சிதம்பரத்தைத் தரிசித்தவரும், காசியில் இறப்பவரும் முத்தி அடைவார் என்ற விஷயத்தை எடுத்துக் கூறினார். ''ஸ்ரீ அருணகிரிநாதரின் முத்தித் தலமாக விளங்கும் திருவண்ணுமலையை நினைத்தாலேயே முத்தி பெறலாம்'' என்ற கருத்தை அடிகளார் எடுத்துக் காட்டி இக்கருத்தினை திருஞான சம்பந்தர் ஆமாம் பிணையணையும் பொழில் அண்ணுமலையண்ணல் - பூமாங்கழல் புனை சேவடி நினைவர் வினையிலரே! எனச் சிறப்பித்து பாடியுள்ளதையும் மேற்கோள் காட்டிப் பாராட்டிப் பேசினர். பின்னர் அடிகளார் ''பேசா அநுபூதி பிறந்ததுவே'' என்ற கந்தர் அநுபூதிப் பாடலின் கருத்துக்கு விளக்க உரை கூறினர்கள். நாம் நமது ஐம்புலன்களை அடக்க இறைவனை ஒரு சிறிது நேரமாவது தியானிக்கப்பழகுதல் வேண்டும். உலக வாழ்க்கையில் மன அமைதி வேண்டுவோர் இறைவனை தியானித்தால் மட்டுமே மனக் கவலை தீர்ந்து 'அமைதி நிலை' பெறலாம் என்ற விஷயத்தையும் அடிகளார் ''தனக்குவமையில்லா-

நான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக் கவலை மாற்றல் அரிது'' - என்ற பொய்யா மொழிக் குறளின் பொன் எழுத்துக்களையும் அறிவித்து விரிவுற சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் விழாவின் சிகரமாக அமைந்தது சாது ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் அவர்களது ''முருக கான பஜனும்ருதம்'' தேனினும் இனிய தெய்வீக சாரீரசம்பத்து பெற்ற முருகதாஸ் அவர்கள் கேட்போர் மெய் மறக்க, நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருக, தம் மனம் உருகி முருகப்பரமனது திருப்புகழை இன்னிசையால் வாயாரப் பாடிப் பாடி கூடியிருந்த மக்கள் கூட்டத்தை முருக நாம பஜனையில் மூழ்குவித்து மகிழ வைத்தார்.

பின்னர் தமிழ்மொழிப் புலவர் திரு. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் நன்றியுரை கூற ஆண்டு விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன.

## சித்தானைக்குட்டி சுவாமிகளின் 20- ஆம் குரு பூசை.

மேற்படி குருபூசை 9-8-70 ஞாயிற்றுக் கிழமை போயா தினத்தன்று அகில இலங்கை சித்தானைக்குட்டி சமரச சன்மார்க்க சங்க ஆதரவில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைத் தீவில் சுவாமிகளின் சமாதியில் நடைபெற திருவருள் கிடைத்துள்ளது. அத்தருணம் அன்பர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் அழைக்கின்றனர்.

★★

# கயிறு ஊசல்

வித்துவான்:— அ. வைத்தியலிங்கம் எம். ஏ.,
வேலூர், (சேலம் மாவட்டம்)

ஓங்கி உயர வளர்ந்த மரம் ஒன்று. அதன் ஒரு கிளையில் ஊசல் கயிறு தொங்குகிறது. இக்காலத்தில் ஊசலை ஊஞ்சல் என்பர். அந்த ஊசல் கயிற்றில் ஒரு பெண் ஏறி அமர்ந்து ஆடுகிறாள். ஊசல் தான் நின்ற இடத்திலிருந்து வேறு ஒரு பக்கம் சென்று பற்றும். அங்கும் அது நிலையாக நிற்காமல் அதைவிட்டு மறுபக்கம் வந்து பற்றும். இரண்டு திசைகளிலும் நிலைபெறாமல் இடையிலும் நிலையாக நிற்காமல் அலைந்து கொண்டேயிருக்கும். இந்த ஊசலைப் போல என் நெஞ்சம் அலைகிறது என்று திருநாவுக்கரசு நாயனார் ஊசலை நெஞ்சத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

நம் நெஞ்சம் எப்பொழுதும் ஒரு பொருளைப் பற்றியிருப்பதில்லை. ஒன்றைவிட்டு மற்றொன்றுக்குத்தாவும். அதையும் நிலையாகப் பற்றாமல் மீண்டும் வேறொன்றுக்குத் தாவும். இவ்விரண்டையும்விட்டு இடையில் அலைந்து எதையும் பற்றாமல் துன்புறும். நெஞ்சத்தின் இந்த நிலையற்ற நிலையை நம் நெஞ்சத்தில் பதிய வைக்கிறார் நாவரசர்.

ஊசல் தன் நிலையை விட்டு மற்றொன்றைப் பற்றுதல் போல் நெஞ்சம் ஒரு பொருளைவிட்டு மற்றொரு பொருட் சார்பில் சென்று பற்றும். அப்பொழுது உலகியலில் உழன்று திரியும். இதை வாகீசர் 'உறு கயிறு ஊசல்போல் ஒன்றுவிட்டு ஒன்று பற்றி' என்றார். நெஞ்சம் தன் உயிர் சார்பை விட்டுப் பொருட்சார்பைப் பற்றுதலை இவ்வாறு கூறினார். இதையே ஊசல் ஒத்த உள்ளம், ஊசல் செய் மனம் என்பர் ஆன்றோர்.

ஊசல் அவ்விடத்தை விட்டு மீண்டும் திரும்பிவரும். வந்த இடத்திலும் நிலையாக நிற்காது. அதுபோல் நெஞ்

சம் பொருட்சார்பைவிட்டு உயிர்ச்சார்புக்கு வந்து நானுர் என் உள்ளம் ஆர் என்று ஆராயும். இங்கும் நிலைத்து நில்லாது. இதையே, 'மறுகயிறு ஊசல் போல வந்து வந்து உலவும் நெஞ்சம்' என்ருர்.

உயிர்ச்சார்புக்கு வந்த நெஞ்சம் ஆன்ம விசாரணை செய்து தன்னை உயர்த்திக் கொள்ளலாம். அதுவும் செய்யாது மீண்டும் பொருட்சார்பை நோக்கி அலையும். ஊசல் எவ்வாறு இரண்டு முனைகளிலும் எங்கும் நில்லாது இடையில் அலைந்து கொண்டிருக்குமோ அதுபோல நெஞ்சம் அலையும் என்ருர்.

பெண் ஊசலாடிக்கொண்டிருக்கிருள். நெடுநேரமானதும் ஊசல் கயிறு அறுந்து விடுகிறது. பெண் என்ன ஆவாள்? தரையில் விழுந்து விடுவாள். கயிறு அற்றுத்தவிக்கும் பெண்ணைத் தரை தாங்கிக்கொள்கிறது. மகளுக்கு வரும் இடையூற்றைத்தாங்கி உதவி செய்யும் தாயைப் போல, ஊசல் கயிறற்று விழுபவனைத் தரை ஆதாரமாக இருந்து தாங்குகிறது. இதைச் சிவஞானபோதம், 'ஊசல் கயிறு அற்ருல் தாய் தரையே ஆம்' என்கிறது.

நெஞ்சம் ஒருகால் பொருட்சார்பும், மறுகால் உயிர்ச்சார்பும் கொண்டு நிலையற்று அலைகிறது. பொருட்சார்பும் உயிர்ச்சார்புமாகிய இருசார்புகளும் அற்று ஆன்மா விழுங்காலத்தில் தாயிற்சிறந்த தயாவான இறைவனின் திருவடியே பற்றுக் கோடாகக் கிடைக்கிறது.

'கயிறுபோல்வது பாசம். கயிற்ருல் கட்டப்பட்ட ஊசல் போல்வது பாசபந்தமுடைய பசு (ஆன்மா). கயிறற்ற ஊசல் போல்வது பாசம் அற்ற ஆன்மா. ஊசற்கு நிலைக்களமான தரைபோல்வது, பாசம் அற்ற ஆன்மாவிற்கு நிலைக்களமான திருவடி' என்று வணக்கத்திற்குரிய முதுபெரும் புலவர், வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் அழகுற விளக்கியுள்ளார்கள்.

(தொடரும்)

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 21 ஆண்டுகள் பூர்த்தியாகி 22வது ஆண்டு ஆரம்பமாகி 9-வது இதழ் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினாலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை)

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 17–7–70